



FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011



YOUR TRUSTED TRAVEL AGENT
For Fast and Friendly Service

## Ganesh Overseas Travel & Tours



Your Reliable Tourist Car Operator
For Timeless Service

## Aruraj Cabs

217, First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008.

Cables : GANESHTOUR Tel : 810256

**Your Safety Is Our Concern**


FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011



- ☐ கட்டுமஸ்த்தான ஆள் சுமக்க வேண்டிய மூட்டைகளை இந்தச் சிறுவன், தலைமேல் சுமக்கிறான் வயிற்றுக்காக! இளமையில் வறுமை கொடிது!

- ☐ இந்தியாவில் 29 கோடி குழந்தைகள்; அதில் 3 கோடி பேர் குழந்தை தொழிலாளர்கள். அதாவது 14 வயதுக்குள்ளவர்கள் 42% பேர்கள்.

- ☐ உலகிலேயே அதிக குழந்தைகள் உழைக்கின்ற நாடு இந்தியா. உலகின் மூன்றில் ஒரு பங்கு குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியாவில் உள்ளனர்.

- ☐ சிவகாசியிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள 1432 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் 50,000 குழந்தைகள் உழைக்கிறார்கள். அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் உள்ள 'பெருமை' தமிழகத்துக்குத் தான்!

- ☐ பெற்றோரின் அவல வறுமையைத் துடைக்கவே பல குழந்தைகள் வேலைக்குச் செல்கின்றன. குழந்தைத்தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு தருதல் என்பது ஏழைக் குடும்பத்தின் வாழ்க்கை தேவையை திருப்திகரமாக பூர்த்தி செய்தால் மட்டுமே மலரும்.

FREE E_BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# மூன்று நாமங்கள்!!!

ஜெயவர்த்தனனே, சமாதானத்திற்கு வருவதுப் போலப் போக்கு காட்டிக் கொண்டே, பௌத்த மதம் பரவியுள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், பிற தென்கிழக்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், இலங்கையில் நடப்பது இனப் படுகொலை அல்ல; மிகு தீவிரவாதத் தமிழ் இளைஞர்களை ஒடுக்கும்பணியே; பௌத்த மத நாட்டிற்கு எதிராக இந்துக்களும், கிறிஸ்த்துவர்களும் செய்த கலகமே' என்று பொய்ப் பிரச்சாரம் செய்ததுடன், சோடா புட்டித் தமிழர்களை உள் நாட்டிலும், இந்தியாவிலும், ஆறவைத்துவிட்டார்.

பாரத அரசிற்குப் பளிச்சென்று தெரியும்படியாக நாமம் தீட்டிவிட்டார்!

இலங்கையில் இனப்படுகொலை நடக்கும் முன்பே, அந்த இனப்படுகொலை நடக்க இருக்கிறது என்ற ஒற்றுத் தகவல் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தால், தில்லிக்குத் தெரிவிக்கப்பட்டது என்பது தற்போது வரும் செய்தி! தெரிந்தும் 'அமைதி நோபல் பரிசு' பெற வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் அமைதியாக காத்திருக்கிறார் அம்மையார்! கலகம் நடக்கும் முன்னும், நடக்கும் போதும், நடந்த பின்னும், 'பங்களாதேச வீரவேசம்' வராமல் பொறுமை காத்த அம்மையார், தமிழக அதிமுக அரசிற்கும், தமிழர்க்கும் "இலங்கைத் தமிழர் புதுத்தீர்வால் பொலியப் போகின்றனர், இதோ சர்வதிறமை வாய்ந்த ஜீ.பி., அதோ நரசிம்மவதாரம்" என்றெல்லாம் நடித்து, கொஞ்சநஞ்சம் குதித்துக் கொண்டிருந்த தமிழர்களையும் அடங்கவைத்து, இந்திரா, தமிழர்க்கு போட்ட பட்டை நாமம்!

சென்னையிலும், தில்லியிலும் நடந்த வி.ஐ.பி. வரவேற்பில் ஈடுபட்டுப் பாடுபட்டு மகிழ்ந்த மகிழ்ந்துக் கொண்டிருக்கிற அமிர்தலிங்கம் அன் கோ, இலங்கையில் தமிழரை வைத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் "திமுக, அதிமுக!". இந்தப் பிரச்சனையைச் சாதுரியமாக வாழ வைத்து வாழ வேண்டும் என்ற உள்நோக்கில்! "அன்கோ" வினர், இந்தியத் தமிழர்க்கும், இலங்கைத் தமிழர்க்கும் போட்டுக் கொண்டிருப்பது பெரிய பெரிய கொட்டை நாமம்! —விழிப்பூட்டி

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

## சோற்றுச் சுமைகள்

சூரியனைச்
சுமந்ததற்குச்
சரியான
கூலி
கிடைக்காததால் தான்
மாலை நேர
வானம்
கோபத்தில்
சிவக்கிறது
எந்த
ராத்திரிச்
சமரசங்களிலும்
மயங்காமல்
விடியலிலும்
சிவப்பாய்
விழிக்கிறது
என்ன பயன்...
ஒரு வேளை
ஒளிச் சோற்றுக்காய்
மீண்டும்...மீண்டும்
சுமக்கிறது
—என் பூமியின்
ஏழையைப் போல

—மோ விஜயகுமார்





## முற்றுப்புள்ளி

தடுத்து நிறுத்தும்
எச்சரிக்கை
இப்போதெல்லாம்
தாராளமாகக்
கண் திறக்கின்றனவே..?
கருமை நிறப்
பாதாளத்தில்
அகப்பட்டுக் கொண்ட
இந்த வெள்ளை நிற
தேசத்துக்கு
சிவப்பு முக்கோணம் தான்
பச்சைச் சமிக்ஞையோ...?

—இளசை அருணா

## போலீஸ் ஸ்டேசன்

நாலைந்து ரவுடிகளால்
கற்பழிக்கப் பட்டதாகப்
புகார் தரவந்தப் பெண்ணை
நிஜமா—என்று
பரிசோதித்து நிரூபித்தார்
கள்
பத்துப் பதினைந்து போலீஸ்
காரர்கள்

—எஸ். அறிவுமணி



## மாடுகள் நாய்களாகும்

கல்யாணச் சந்தையிலே
மலிந்து போன
சில மாப்பிள்ளை மாடுகள்
ஒரு நொடியில்
வாலைக் குழைக்கும்
நாய்களாகும்
சித்து வேலை செய்வது
எங்கள்
வரதட்சணை எலும்பு!

—கோவை. தாமரை

★ இந்திய ராணுவம் 1746இல் தோற்றுவிக்கப்பட்டது: சென்னையில்!

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# சட்டியார் பதில்!

☐ கவலைக்கிடமானவர்—கல்லூரியில் இடம் கிடைக்காத இளைஞரா அல்லது வேலை கிடைக்காமல் அல்லலுறும் இளைஞரா?

—வி. சுந்தரராஜன், பள்ளப்பட்டி

நியாயமாகக் கிடைக்க வேண்டிய கல்வி, வேலை வாய்ப்பு என்ற இரண்டு அடிப்படை உரிமைகளும் இழந்தவர் என்ற வகையில் இருவர் நிலையும் ஒன்றே.

☐ இப்போது நாளுக்கு நாள் சினிமா பத்திரிகைகள் பெருகிக் கொண்டிருக்கின்றனவே இது பத்திரிகை வளர்ச்சியைக் குறிக்கிறதா? —கே. ஜே. சோமசேகர், சென்னை-33

செக்ஸ் பத்திரிகைகள் பல மாறு வேஷம் போட்டுக கொண்டு இப்படி வருகின்றன. எழுத்துலக வேசித்தனம் வெளிச்சத்துக்கு வருவது வளர்ச்சியல்ல, தளர்ச்சியே.

☐ ஏழை வரதட்சணை வாங்குவது தவறா?

—டி. ராஜசேகரன், திருவெறும்பூர்

மன்னிக்கக் கூடிய தவறு.

☐ பொருளாதார அடிப்படையில் எல்லோரும் சம நிலை எய்தும் நாள் நம் நாட்டுக்கு வரவே வராதா?

சம நிலையில் இல்லாதவர்கள் அனைவரும் ஒன்றாகி திரண்டெழும் நாளில் இது சாத்தியமாகும். நம்பிக்கையோடு இருங்கள்.

☐ இன்றைய நிலையில் ஆட்சியில் லஞ்சமும், ஊழலும் முழுமையாக ஒழிந்து விட்டது என எண்ணுகிறீர்களா?

—ப. முருகையா, கங்கை கொண்டான்

ஆளுங்கட்சி ரசிகன் கூட இப்படி எண்ண மாட்டான்.


## ஆஸ்துமா காசனே!

இனி கவலை வேண்டாம்! முப்பது வருட கால நோயாளிகளுங் கூட, மூன்றே மாதங்களில் வியக்கத்தக்க வகையில் குணமடைய நேரிலும் கடிதம் மூலமும் இலவச ஆலோசனை பெறலாம்.

முகவரி: சித்தஞானி-ஞானோதய வைத்தியர்,
Dr. C. K மாணிக்கவாசகம்,
செலந்தம்பள்ளி (PO) திருப்பத்தூர் (TK)-635653 (N A. Dt.)


FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

காவல்துறை நடவடிக்கை மீது சென்னை உயர்நீதி மன்றம் விதித்த இடைக்காலத்தடை உத்தரவை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு "ஹெல்த் கிளப்" "ப்யூட்டி பார்லர்" என்னும் விபச்சார நிலையங்கள் சென்னை நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கி விட்டன.

# நோய் பரப்பும் அழகு நிலையங்கள்

"அரசு அனுமதி பெற்ற" (Licensed) என்ற வாசகத்தினை இந்த அழகு நிலையங்கள் சௌகரியமாகச் சேர்த்து கொண்டு காமக் களியாட்டங்களை நடத்தி வணிகம் செய்கின்றன. 1982 ஜூனில் பிரபல தமிழ், ஆங்கில நாளிதழ்களில் நிறுத்தப்பட்ட இது தொடர்பான விளம்பரங்கள் மீண்டும் புற்றீசல்போல் வரத்தொடங்கிவிட்டன. உடம்பு பிடித்துவிட ரூ 70-ம் காம சேஷ்டைகளில் ஈடுபட ரூ 200-ம் வசூலிக்கப் படுகிறது. இங்கு பயன்படுத்தப்படும் துணிகள், தரை விரிப்புகள் பலயுகங்களாக சோப்பையோ, தண்ணீரையே காணாமல், வாடிக்கையாளர்க்குத் தொற்று வியாதிகளைப் பரப்புகின்றன.

கீழ் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த, 20 வயதுக்கும் மேற்பட்ட, குழந்தைகளுள்ள, கணவன் மார்களால் கைவிடப் பட்ட அபலைப் பெண்கள் இந்த ஈனத்தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் செக்ஸ் வியாதிகளால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள். உல்லாசமாக வருவோர்க்கு இந்த உபாதை நோய்கள் இவர்கள் தொடுதலிலேயே உடனே தொற்றிக் கொள்ள வாய்ப்புண்டு. காசு கொடுத்து, இந்த பயங்கர நோய்களை, தெரியாமல் பல இளைஞர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

பெண்ணுரிமை இயக்கங்கள், ஆபாச சுவரொட்டிகள் பெண்களை இழிவு படுத்துவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது போல இந்த அழகு நிலையத்தில் அவதிப்படும் பெண்களுக்கு மருத்துவ உதவி, வேலை வாய்ப்புக்கு வழி செய்து அவர்களை புனரமைக்க முன் வர வேண்டும்.

— கார்த்திக

★ இந்திய மொழிகளில் வங்காள மொழியில் தான் முதல் பத்திரிகை வந்தது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# வாசகர் குரல்

**கோவையில் அசிங்கப் படங்கள்:** கோவை டவுன் ஹாலுக்கு அருகிலுள்ள ஒரு தியேட்டரில் காலைக் காட்சியாக மலையாளப் படங்கள் போடுகிறார்கள். கூட்டம் சேர்க்க காட்சியின் இடையே 'ப்ளு' பிலிமையும் சேர்த்துக காட்டுகிறார்கள். கடந்த 2 மாதங்களாக இது நடக்கிறது. விசாரித்ததில் போலீசாரின் ஒத்துழைப்புடனேயே இது நடந்து வருவது தெரிகிறது. உண்மையை அறிய நான் சென்றிருந்த அன்றைக்கு மட்டும் எனக்குத் தெரிந்து 4 போலீசார் படத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். சட்டத்தைக் காக்க வேண்டியவர்களே ஆபாசத்திற்கு உடந்தையாக இருப்பது கண்டு நெஞ்சம் கொதிக்கிறது. இந்த ஆபாசத்தைத் தடுத்து நிறுத்த மேல் அதிகாரிகளாவது முன் வருவார்களா?

—எப். சேகர், கோவை.8

**மதுரை ரேஷன்:** "15 கிலோ கோதுமை வாங்கினால் தான் 5 கிலோ அரிசி போடுவோம்; 4 கிலோ மைதா வாங்கினால் தான் 2 கிலோ ரவை போடுவோம்" இப்படி நிபந்தனை விதிக்கிறார்கள் மதுரை ரேஷன் கடைச் சிப்பந்திகள். ஒன்று வாங்கினால் தான் இன்னொன்று என்று அரசு ஒன்றும் ஆணை பிறப்பித்திருப்பதாகத் தெரியவில்லையே! பத்திரிகைகளில் ஏதாவது ஒரு பொருள் குறிப்பிட்ட மாதத்திற்குக் கூடுதலாகப் போடப்படும் என்று செய்தி வருகிறது. ரேஷன் கடைக்குச் சென்றால் "எங்களுக்கு இன்னும் ஆர்டர் வரவில்லை" என்று கைவிரிக்கிறார்கள். சிலம்பைக் கையில் எடுத்துக் கொண்டு இனி கண்ணகி தான் சீற வேண்டுமோ.

—விஷ்ணு, மதுரை 2

**கிராம அதிகாரிகள் நியமனம் எப்போது?** புதிய கிராம நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க 15-2-81 அன்று தேர்வு (TNPSC) நடந்தது. இதில் தேர்வு பெற்றவர்களுக்கு 24-4-81 அன்றும் அதற்கு முன்பும் நேர்முகத் தேர்வு மாவட்டத் தலைநகரங்களில் முடிந்தது. இடையில் பதவி பறி போன முன்னாள் கிராம அதிகாரிகளை நீதிமன்ற தீர்ப்பின் படி தகுதி வாய்ந்த 5000 பேர்களை கிராம நிர்வாக அலுவலர்களாக தமிழக அரசு நியமிக்க வேண்டியதாயிற்று

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

இதற்கிடையில் தமிழக அரசிற்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு இந்த நியமனத்தில் கயிறு இழுப்பு போராட்டம் என்னும் ஒரு செய்தி, இந்தப் பிரச்சனைக்கு நடுவில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக வேலையற்ற பட்டதாரிகள் உட்பட ஆயிரமாயிரம் இளைஞர்கள் தேர்வு நியமனத்தை எதிர் நோக்கி காத்திருக்கின்றனர். இனியும் தாமதிக்காமல், மீதியுள்ள இடங்களுக்கேனும் கிராம நிர்வாக அதிகாரிகளை உடனடியாக அரசு நியமிக்க வேண்டும். காத்திருக்கும் சிலருக்கேனும் காலம் கனியட்டுமே.

—என். ரங்கசாமி, கோப்பனூர் புதூர்

**ஜோலார்ப்பேட்டை அரசு பள்ளி அவலம் :**

ஜோலார்ப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, அசுத்தம், அசிங்கம் ஆகியவற்றின் இருப்பிடமாக உள்ளது. மாணவ மாணவியர் சேர்ந்து படிக்கும் இப்பள்ளியில் மாணவியர்க்கு தனி கழிப்பிடம் கிடையாது. பழைய வகுப்பறைகளையே கழிவிடமாகப் பயன்படுத்துகிறார்கள். உடைந்த கதவுகளுடைய சில வகுப்பறைகள் பூட்டப் படாமல், இரவில் தவறு செய்வோர்க்கு 'லாட்ஜ்' ஆகப் பயன்படுகிறது. காலையில் காணப்படும், உபயோகிப்பட்ட கருத்தடை உறைகளைக் காணும் மாணவ மாணவியர் மனம் பாதிப்படைகிறது. பள்ளி சுவர்கள் சினிமா விளம்பரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஒழுக்கமில்லா இப்பள்ளியில் படித்த, ஒழுக்கமுள்ள மாணவர்களுக்கும் வெளிக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை.

இந்த அவலங்களை பள்ளி இயக்குநர் உடனே கவனிப்பாரா?

—மறுமலர்ச்சிப்பித்தன், ஜோலார்ப்பேட்டை

---

போர் வெறியை நியூயார்க் டைம்ஸ் நிருபர் ஜான் ஒக்ஸ் "ரீகன் யுத்தப் பாதையில் சறுக்கிக் கொண்டிருக்கிறார்" எனக் கண்டிக்கிறார்.

"அண்டை நாடுகளில் பயங்கர ஆயுதங்கள் தங்கு தடையின்றி குவிக்கப்பட்டுள்ளன. நம் மீது திணிக்கப்படும் எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்க தயாராக வேண்டும்" என இந்திய விமானப்படைத் தளபதி ஏர்சீப் மார்ஷல் தில்பாக் சிங் அண்மையில் பேசியுள்ளது நம் சிந்தனைக்குரியது.

—உலகப்பன்

★ இந்தியாவில் நீண்டகாலம் முதலமைச்சராக இருந்தவர் மோகன்லால் சுகாதியா

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# அமெரிக்காவும் 3 வது உலகப்போரும்!

அமெரிக்கா, 3-வது உலகப்போரை இந்தியாவில் நடத்த ஏற்பாடு செய்வதாக ஐயம் ஏற்பட்டுள்ளது!

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்மையில் சீனாவுக்குச் சென்று புதியவகை படைக்கலன்களை அங்கு விற்க முனைந்திருக்கிறார். அதன் பின்னர் இந்தியாவிற்குள் நுழையாமல், தள்ளி பயணம் செய்து பாகிஸ்தானில் இறங்கி பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளை செய்வது பற்றி பேசியிருக்கிறார்.

இதற்கிடையில் ஸ்ரீலங்காவின் திரிகோணமலையில் அமெரிக்கக் கப்பற்படை தளம் அமைக்க இலங்கை அரசின் முழு ஒத்துழைப்பையும் அமெரிக்க ராணுவம் பெற்றுள்ளது. இந்துமாக்கடலில் உள்ள டிகோ கார்சியா தீவில் அமெரிக்காவின் கடற்படைத்தளம், நூதனத் தாக்குதலை நடத்த தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.


வ்'ஷ வாயு, விஷக் கொசு உற்பத்தி போன்ற அரக்கத்தனமான போர் முறைகளுக்குறிய ஏற்பாடுகள் வெட்கமின்றி நடததப்படுகின்றன.

வட இந்தியாவில் புது வித விஷக்காய்ச்சல் பரவி சமீபத்தில் 250 பேரை பலிவாங்கியிருக்கிறது. இது அமெரிக்க சி.ஐ.ஏ. யின் வேலை எனக் கருதப்படுகிறது. ஆசிய விளையாட்டுப் போட்டியின் போதும் இதே விஷக்காய்ச்சல் பரப்பப்பட்டு 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதும், பலர் இறந்ததும் நாடறிந்ததே.

இந்தியாவுடன் சுமுகமான உறவில் இல்லாத தென் ஆப்பிரிக்கா, அமெரிக்க ஆதரவுடன் இயங்கும் வளைகுடா நாடுகள், எகிப்து இவையெல்லாம் அமெரிக்காவிற்காக, இந்தியாவிற்கு எதிராக ஆதரவுக்காட்டக்கூடும்.

இந்தியாவைச் சுற்றிலும் போர் மேகங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் சூழச்செய்துள்ளது, மிகத் தெளிவாகத் தெரிகிறது! பொதுவாக சோஷலிச முகாம்களை ஒழித்துக்கட்ட முன்னெப்போதும் கண்டிராத ராணுவ தயாரிப்புக்களை அமெரிக்க அரசு மேற்கொண்டுள்ளது. தனது எதிரிகளின் பட்டியலில் கூட்டுச்சேரா இயக்கத்தை ரீகன் சேர்த்துள்ளார். உலக சமாதானத்திற்கு எதிரான அமெரிக்காவின்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

அனுபவக் கட்டுரைப் போட்டி

# [illegible]

முதல் பரிசு

24, ஏப்ரல் 1983,
மவுண்ட் ரோடு எல். [illegible]
[illegible]
காலை எட்டு—எட்டரை மணி [illegible]
[illegible]
காதைத் துளைக்கும் விசில் [illegible]
எங்கிருந்தோ கேட்டது
ரோட்டைக் கிராஸ் பண்ணத் [illegible]
[illegible]
அந்த முப்பத்தி மூனு வயது [illegible]
இளைஞன்
வந்த வழியே திரும்பி விட்டான்—
"சட்டத்தை மீறுவது
சரியல்ல" என்ற உணர்வில் [illegible]
ஆனால்—
விசில் ஊதிய போலீஸ்காரர்
விடவில்லை, நடந்தவனை நோக்கி
"ஏய்! ஒனக்கு அறிவிருக்கா?"
—என்று அதட்டினார்.

கட்டுமஸ்தான அந்த இளைஞனும்
எதிரிகளோடு மல்லுக்கு நிற்பதில்
எப்போதுமே இளைத்தவனில்லை
என்பதை
இப்போதும் உறுதிப் படுத்தினான்!
"நான், சுற்றும் முற்றும் பார்த்துத்
[illegible] தான்—
எந்த [illegible] இல்லாதபோது
ரோட்டைக் கிராஸ் பண்ண [illegible]
போனேன்;
விசில் ஓசை கேட்டபின்
குற்ற உணர்வில்
திரும்பி விட்டேன்!
ஆனால்... மீண்டும் என்னைத் துரத்தி
வந்து
'ஏய்! ஒனக்கு அறிவிருக்கா
என்கிறாய்?' —ஆமாம்...
ஒனக்கு அறிவிருக்கா?"—
அவன் எதிர்க் கேள்வி போட்டான்!
போலீஸ்காரருக்கோ
கோபம் பொத்துக் கொண்டு வந்தது
"என்னடா... காலிப்பையா!
யாரைப் பார்த்துடா
அறிவிருக்கா என்கிறாய் (!)?

நான்சென்ஸ்! வாடா ஸ்டேஷனுக்கு!''
—அவர் உறுமினார்.
இதுக்கெல்லாம் மசிய மாட்டேன்
என்பது போல, அந்த இளைஞனும்
திருப்பி—முறைத்தான்!
போலீஸ்காரர் கண்கள் மட்டுமல்ல
முஸ்டியும் வெருண்டது;
லத்திக் கம்பை ஓங்கினார்!
இளைஞன் குமுறினான்;
"கழுதை! இன்னுமொரு தடவை
கையைத் தூக்குனே...
ஒன் கையை ஒடிச்சுப் புடுவேன்...
ஜாக்கிரதை!''
அவன்
போலீஸ்காரரை நோக்கி
முன்னேறினான்!
தாக்கியே பழக்கப் பட்டவர்களுக்கு
தாக்குதல் வருகிற போது...
மிரளுவது வழக்கம்—
அதிலும்
குற்றவாளியே மிரட்டியது
அவமானமாகவும்
தாங்க முடியாத அவஸ்தை போலவும்
அவருக்கிருந்தது!



இந்த இருவரின் இரைச்சலில்
கூட்டம் கூடியது;
வேடிக்கை என்றால்
யாருக்குத் தான் பிடிக்காது?
... ...
போலீஸ்காரர்
என்ன குற்றம் செய்தார் என்பதை
பிறருக்கும் தெரிய வேண்டும்
என்ற உணர்வில்,
அந்த இளைஞனே சொன்னான்:
"தவறு செய்வதற்காகவே
இதுகளைப் போன்றதுகள்
நம்பரை மாட்டிக் கொள்வதில்லை;
நம்பரில்லாத 'இது'—
சட்டத்தை மீறுகிற 'இது'—
நம்கிட்டே சட்டம் பேச வந்திருக்கு''
என்று அக்னிப்பணியில் இரைந்தபடியே
போலீஸ்காரரைப் பார்த்து
அவன் கேட்டான்:
"ஏய்! ஒன் நம்பர் எங்க...?''
பாவம்...
போலீஸ்காரர்
மெல்ல நழுவினார்!
கூட்டமே சிரித்தது—
'கொல்'லென்று!



அனுப்புநர்: கமசிவாயம்,
C/o சு.மீ.த ஸ்டோர்ஸ்,
787, அண்ணாசாலை,
சென்னை-600 002.

# இந்தியா - நேற்று இன்று நாளை 2

**இந்தியாவில் வறுமை :**

வறுமை என்பது இந்தியாவின் தொடர் கதை, தொடர் கதை பத்திரிகைகளுக்கு எப்படி முக்கியமோ அப்படி அரசியல் வாதிகளுக்கு வறுமை முக்கியம். இருப்பினும் ஆண்டவர்களோ அல்லது ஆளுபவர்களோ இந்தியாவின் பொருளாதார நிலையை முன்னேற்ற வறுமைப் பிரச்சனை களைத் தீர்க்க முயலவே இல்லை என்று கூற முடியாது. அப்படிச் சொல்வது நேர்மையான விமரிசனமாக இருக்காது நேர்மையாக விமரிசிக்காதவர்கள் நேர்மையான தீர்வுகளை சொல்லவும் தகுதியற்றவர்கள்.

பிரச்சனைகளின் மீது ஆளுபவர்களின் கண்ணோட்டமும், கருத்தோட்டமும் சரியில்லை. இந்நாட்டில் அரசியல் தலைமை வெறும் நிர்வாகிகளிடம் தான் இருக்கிறது. நிபுணர்களுக்குப் பங்கில்லை. எனவே வறுமையைப் பற்றித் தீர்மானிப்பதிலும், திட்டமிடுவதிலும் குழப்பம் இருக்கிறது. ஊதியங்களின் அடிப்படையில் மனிதர்களை பல்வேறு வகைகளாகப் பிரித்து அவர்களது தேவைகளின் அளவுகளை நிர்ணயித்திருக்கிறோம். இந்த வேறுபாடே மனித சமுதாயத்தில் வறுமையைத் தோற்றுவிக்கிறது.

வறுமையை ஒழிக்க முதல் கட்டமாக சமுதாயத்தின் தேவைகளை ஒழுங்கு படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் உற்பத்தியை தர வேறுபாடில்லாமல் விரைவு படுத்த வேண்டும். வெளி நாட்டில் ஒருவன் நான்கு கார்கள், ஆறு வீடுகள் வைத்திருக்கிறான் என்ற பேச்சை நிறுத்தி விட வேண்டும்.

நம் நாட்டில் ஒவ்வொருவருக்கும் வசிப்பதற்கு இவ்வளவு இடம், உடுப்பதற்கு சில நூலாடைகள், உண்பதற்கு சில அவுன்ஸ் தானியம் தான் வழங்க முடியும் எனில் அதைத் தெளிவாக மக்களுக்கு உணர்த்தி இவற்றை யாவது தட்டுப் பாடு இல்லாமல், துன்பம் இல்லாமல், நம்பிக்கையுடன் பெறுவதற்கான நிலையை உண்டாக்க வேண்டும். இது இரண்டாம் கட்டம்; கட்டுக் கோப்பான இடை விடாத

வெற்றி இதழைப் படிக்காதவர்களும் படிக்கலாம்

FREE E-BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

உழைப்பின் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது மூன்றாவது கட்டம்.

சராசரியாக என்ன கிடைக்குமோ அதற்கு ஒருவன் தவித்து, பாதுகாப்பற்று நிற்பதே வறுமை. அந்த நிலையை அகற்றுவதும், உற்பத்தி பெருகுவதற்கான நல்ல அரசியல் நிர்வாக சூழ் நிலையை உருவாக்குவதும் தான் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த வழிகளாகும்.




**சுரண்டல்:**

இன்று எல்லோருக்கும் அடைக்கலச் சொல்லாகி விட்ட ஒன்று தான் சுரண்டல். சுய தேவைகளை நிறைவு செய்து கொள்ள பொருட்களைத் தேடித் திரியும் விலங்கினங்கட்கும் மனிதனுக்குமிடையேயான வேறுபாடு நமக்கு விளங்கி விட்டால் சுரண்டலின் பொருளும் விளங்கி விடும்.

மனிதனின் நடைமுறையை ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படும். மனிதன் பிற உயிரினங்களைப் போல சேகரிப்பவனாக இல்லாமல் உழைப்பவனாக, உழைப்பின் வழி உற்பத்தி செய்பவனாக இருக்கிறான். ஆகவே இந்த உழைக்கின்ற தன்மை தான் மனிதத் தன்மையாக இருக்கிறது.

இங்கே தான் அவனது சுதந்திரமும் வெளிப்படுகிறது. இந்த சுதந்திரமான உழைப்பின் மூலமாக அவன் தன்னைத் தானே உணர முடிகின்ற நிலை தான், இதற்கான சமுதாய சாத்தியக் கூறுகள் தான் மனித சுதந்திரத்தை நடைமுறை உண்மையாக்கும் அடிப்படைகளாக இருக்கும்.

வாழ்க்கை அல்லது இருப்பு என்பது இந்தத் தன்மையை சுதந்திரமாக வெளிப்படுத்த வழி முறையாக இருக்க வேண்டும். மாறாக, எவ்வாறேனும் வாழ வேண்டி இந்தத் தன்மையை உழைப்பு வழிமுறையாக இழந்து விடச் செய்கின்ற சமுதாய அமைப்பு சுதந்திரத்தைப் பறித்து விடுகின்றது.

இந்த உழைப்புச் சுதந்திரம் பறிக்கப் படுகின்ற வழியாக தான் சுரண்டல் உள்ளே நுழைகிறது. (தொடரும்)

★ இந்தியாவின் முதல் திரைப்படம் ராஜா அரிச்சந்திரா (1913)

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# நேரிலும், தபாலிலும் நீங்கள் ஆறே மாதங்களில் கற்கலாம்.




அறிவுலகின் திறவுகோல்

- STRUCTURE
- GRAMMAR
- CONVERSATION

FOR PARTICULARS விபரங்களுக்கு

**THE SCHOOL OF BASIC ENGLISH**
(REGD.)

449, T.H. ROAD, MADRAS-600 021.
B.O. 176, ANGAPPA NAICKEN STREET,
MADRAS-600 001
83, PARK STREET, NEHRU NAGAR,
ENNORE, MADRAS.


FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# நமது முட்டை மருத்துவம்

**தீப்புண் ஆற :** முட்டை வெள்ளைக் கருவை எடுத்து, தீப்புண் பட்ட இடத்தில் பூசினால் புண் எரிச்சல் குறையும்; விரைந்து ஆறும்.

**விஷம் முறிவாக :** பாலில், முட்டை வெள்ளைக்கருவை அடித்துக் கலக்கிக் குடித்தால் விஷ மருந்தால் ஏற்பட்ட தீங்கு முறிக்கப்படும்.

**கண் சிவப்பு தெளிய :** வெள்ளைக் கருவில், கொஞ்சம் படிக்காரத் தூளைக கரைத்து அதைத் தூய்மையான துணியில் நனைத்துக் கண்ணின் மேல் போட்டால் சிவந்த கண் தெளியும்.

**தலையிலுள்ள புண், சிரங்கு ஒழிய :** முட்டை ஒட்டை நெருப்பிலிட்டு சாம்பலாக்கி, இதனுடன் கொஞ்சம் விளக்கெண்ணெயைச் சேர்த்து தலையில் தடவி, கொஞ்சங் கழித்து குளித்தால், தலை சரும நோய்கள் கட்டுப்படும்.

**இரத்தக்கட்டுக்கு :** வெள்ளைக கருவில் கால் பங்கு படிகாரம், கால் பங்கு கரையான் புற்று மண் இவற்றைச் சேர்த்து மை போல அரைத்து, இரத்தக கட்டு உள்ள இடத்தில் பற்றுப் போட்டால், நல்ல குணம் தெரியும்.

**கண்டமாலை கழுத்தைச்சுற்றி ஏற்படும் இவ் வீக்கம் புண், குணமாக :** முட்டையை உடைத்து, கால்படி பசும் பாலில் போட்டு நன்கு அடித்து 40 நாட்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் கண்டமாலை பறந்தோடும்.

(அடுத்து : நமது தேங்காய் மருத்துவம்) —சித்தன்

● அமெரிக்காவில் உள்ள மாதா கோவில்களில் பெரும்பாலானவை யுத்தத்தளவாடங்களை உற்பத்தி செய்யும் கம்பெனிகளில், தமது பணத்தை முதலீடு செய்துள்ளன. இதில் கிடைக்கும் லாபம், வேறெதிலும் கிடைப்பதில்லையாம். இவைகள்தான் ஏசுவின் அன்பைப்பற்றியும் உலக சமாதானம் பற்றியும் பேசுகின்றன. நன்றி: மனஓசை.

★ இந்தியாவின் முதல் வண்ணப்படம் சாய் ராந்திரி என்ற மராத்தி படம்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011




மத்திய பிரதேசத்தின் சுண்ணாம்பு சுரங்கங்களிலும், காளவாய்களிலும் சாவை நோக்கி துரத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 30,000 தொழிலாளர்களின், நரக வாழ்க்கையை ''ப்ரோப்'' வெளியிட்டிருக்கிறது.

40 கி. மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள 100 சுரங்கங்களும், 150 காளவாய்களும் 80% பெண்களையும், சிறுவர்களையும் வேலை வாங்குகின்றன. காலை முதல் இரவு வரை பணியாற்றினால் பெரியவருக்கு ரு 6ம் சிறுவர்க்கு ரு 3 ம் கூலி. காச நோயும், அதை விடக் கொடுமையான தீராத 'சிலிக்காசிஸ்' என்ற நோயும் இவர்களுக்கு போனசாக வழங்கப்படுகிறது. இது 135 ஆண்டாகத் தொடரும் சோகக் கதை!

தொழிலாளர் பலர் இருமிய வண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் தோல் அரிக்கப்பட்டிருக்கிறது. கண்கள் சிவந்து நீர் கசிகிறது. பாதுகாப்பு கவசங்களோ, வேலைப் பளுவை குறைக்கும் எந்த எந்திர வசதிகளோ இன்றி மலிவாக மனித உழைப்பை உறிஞ்சியே இங்கு வேலை நடக்கிறது.

நாயைப் போல குரைத்து ஒரு மேஸ்திரி கையில் சாட்டையுடன் இவர்களைப் பிழிந்து வேலை வாங்கும் காட்சியும், தூர நின்று கொண்டு சுரங்க முதலாளி ஒலிப்பெருக்கியில் இவர்களை விரட்டும் காட்சியும் இங்கு சர்வசாதாரணம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

ஒரு 11வயது சிறுமி—பெயர் இட்வாரியா—சற்றே மதிய ஓய்வெடுக்கும் தொழிலாளர் மத்தியில் சிரமத்துடன் நடந்து வருகிறாள். சீரற்ற சுவாசம்—வெளுத்த உடல்—மூக்கிலும் நலிந்த கண்களிலும நீர் கசிவு பாதத்தில் ரணம்—இந்தக் குழந்தைத் தொழிலாளியை 2 ஆண்டு கால நரக உழைப்பு இப்படியாக்கியிருக்கிறது.



பெட்டி பாய்! சிறுமியின் 37 வயது தாயார்—அவளும் ஒரு சுண்ணாம்புத் தொழிலாளி—தனது பாதிக்கப்பட்ட மகளின் தலையை தனது மடி மீது சாய்த்துக் கொள்கிறாள்.

"இந்தச் சிறுமிக்கு என்ன? என்று கேட்ட போது அங்குள்ள தொழிலாளர்கள் வறட்சியுடன் சிரிக்கிறார்கள், "சும்மா" என்பது போல.

தனது கிழிந்த சேலைத் தலைப்பால், தன் மகளின் கண்களைத் துடைத்தபடி "ஒன்றுமில்லை" என்கிறார் தாயார்.

அவர்களின் அந்தச் சிரிப்பு உண்மையில்லை. 'ஒன்றுமில்லை' என்பதும் உண்மையில்லை. சிறுமி இட்வாரியா, சில நாட்களே வாழ முடியும என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

45 வயது மூத்த தொழிலாளி ராம்பிரகாஷ் உண்மையை உடைக்கிறார் : "இட்வாரியாவிற்குக் காச நோய். அவள் ரொம்ப நாட்கள் வேலை செய்ய முடியாது. இது எங்களிடையே சாதாரண வியாதி. இந்த வியாதி எங்களில் ஒவ்வொருவரையும் இன்றோ, நாளையோ ஒருநாள் பறித்து பலி கொண்டு தான் போகப் போகிறது."

"இந்தச் சிறுமியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லக் கூடாதா?"

"எடுத்துச் சென்றார்கள். ஆனால் என்ன பயன்? அங்கு மருந்து கொடுக்கிறார்கள். சரி, அத்தோடு நிறைய சாப்பிடவும் சொல்கிறார்கள். ஊட்ட உணவு சாப்பிட பணத்திற்கு எங்கே போவோம். வேலை செய்யாமல் ஓய்வெடுத்தால் முழு பட்டினி தான்."

நேரமாகி விட்டது. அவர் மீண்டும் வேலைக்கு எழுகிறார். ஏற்கனவே சிறுமி இட்வாரியா, சுண்ணாம்புச் சுமையைத் தலைமேல், சுமந்து கொண்டு மேட்டின் மேல் ஏறிக் கொண்டிருக்கிறாள்.

***இங்குள்ள பல தொழிலாளர்கள் முன்னாள் விவசாயிகள். கடன் சுமையால் நிலமிழந்து, இங்கு சுண்ணாம்பு முதலாளிகளிடம் விலங்கு மாட்டிக் கொண்டவர்கள்.***

***இந்த பரிதாபத்துக்குரிய சுண்ணாம்புத் தொழிலாளர்கள் தங்கள் 135 ஆண்டு நரக வாழ்வை முறியடிப்பது, இவர்களின் ஒன்றிணைப்பிலும், இயக்க ரீதியான போராட்டத்திலும் மட்டும் தான் இருக்கிறது.***

—எழில்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# நாம் அறியா மறந்தவர்கள்

அரசியல் வெளிச்சத்தில் மின்னுகின்ற அரசியல் பிரமுகர்களுக்கும், அதிகார பின்னணியில் இருப்பவர்களுக்கும் விழா எடுக்கிறார்கள். சிலை வடிக்கிறார்கள். புத்தகம் வெளியிடுகிறார்கள். ஆனால்—

உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை மலரச் செய்த விஞ்ஞானிகள் பலரை நன்றி கெட்ட உலகம் மறந்து விட்டது. மக்களுக்கு அறியச் செய்யவில்லை. நமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மிக அத்தியாவசியமான பொருட்களை கண்டுபிடித்தவர்களின் விவரத்தைத் தருகிறோம். இவர்களுக்கு மனதால் நன்றியாவது சொல்வோம்.

காகிதம் — ட்சாய் லுன்-சீனா-கி பி 105
இரப்பர் — சார்லஸ் மாகிடேஷ்.ஸ்காட்லாந்து-1819
மை பேனா — வாட்டர்மென்-அமெரிக்கா-1884
பந்து முனை பேனா — மில்டன்ரோனல்டு-அமெரிக்கா-1944
கடிகாரம் — ஹைஜின்ஸ்.ஹாலந்து-1556
கைக் கடிகாரம் — ஏ எல். பர்கெட்-பிரான்ஸ்-1791
எலக்ட்ரானிக் கடிகாரம் — நார்பட் மோரவ்ஸ்கி-மே.ஜெர்மனி
சைக்கிள் — மாக்மில்லன்-ஸ்காட்லாந்து-1840
மோட்டார் சைக்கிள் — டைம்லர்
சவரக்கத்தி — கே. ஜி. கில்லட்-அமெரிக்கா-1645
தையல் இயந்திரம் — திமோனியர்-பிரான்ஸ்-1830
பிளாஸ்டிக் — ஸார் தேம்ஸ் யுயூவர்
பெயின்ட் — சாலிமர்
கம்ப்யூட்டர் — பாப்பேஜ்
ஏவர்சில்வர் — பிரியர்லி-இங்கிலாந்து
காஸ் ஸ்டவ் — புன்மென்
பிளைவுட்—இமானுவேல்-நோபல்
தட்டெழுத்து பொறி — ஷோல்ஸ்-அமெரிக்கா-1863
டிரான்சிஸ்டர் — சாக்லி, ஜான் பார்டீன், வால்டர் (மூவர்) 1948
தொலைபேசி — கிரகம்பெல்-அமெரிக்கா-1876
தொலைக்காட்சி — ஜே. எல். பெயர்டு-இங்கிலாந்து-1926
காற்றடித்த டயர் — டன்லப்-இங்கிலாந்து-1845
கெட்டியான டயர் — குட்இயர்-அமெரிக்கா
பெட்ரோலியம் — எட்வர்டு டிரேக்-அமெரிக்கா-1859

(ஆதாரம் : அறிவியல் வளர்ச்சி: அகர வரிசை வினா விடை
முகவரி : எமக்கு வந்தவை காண்க.

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# நீர்ப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு

ஆறு பேர் உடைய ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு, சராசரி சுமாராக 752 லிட்டர் தண்ணீர் செலவாகிறது. நீர்ச் செலவைப் பின்வருமாறு கணக்கிடலாம் :

| | | |
|---|---|---|
| குடிப்பதற்கு | 12 லிட்டர் | 1 60 /. |
| சமைப்பதற்கு | 30 லிட்டர் | 3. 99 /. |
| குளிப்பதற்கு | 180 லிட்டர் | 23. 94 /. |
| பாத்திரம் கழுவ | 100 லிட்டர் | 13. 30 /. |
| துணி துவைக்க | 180 லிட்டர் | 23. 94 /. |
| கக்கூஸ் கழுவ | 250 லிட்டர் | 33. 24 /. |

குடிப்பது, சமைப்பது, குளிப்பது மட்டும் அல்லாமல், அரிதான குடிநீரை, மற்றைய உபயோகங்களுக்கும் சென்னை மக்கள் பயன்படுத்திப் பாழாக்குகின்றனர்; வேறு சிலர், இதே குழாய் நீரைத் தம் தோட்டங்களுக்கும் பாய்ச்சுகின்றனர். கக்கூஸ் கழுவ மட்டும் 33.24% குடிநீர் பாழாக்கப்படுகின்றது. பொது இடங்களில் உள்ள கழிப்பறைகளையும் கணக்கில் கொண்டால், கிட்டத்தட்ட, 50% குடி நீர், கக்கூஸ் துப்புரவிற்கு மட்டும் வீணாக்கப்படுகிறது. நீர்ப் பற்றாக்குறை நிரந்தரமாகி விட்ட, சென்னையில் இது பெருங் கொடுமையிலும் கொடுமை!

இந்த விரயத்தை நிரந்தரமாகத் தவிர்க்க, ஒரு வழி உள்ளது. கடல் தண்ணீரைப் பம்ப் செய்து பயன் படுத்திக் கொள்வது மிக பெரிய வழி, ஒரு சில எண்ணெய்க் குடா நாடுகளில், இம்முறை அமுலில் உள்ளது; கப்பல்களில், கடல் நீரே டாய்லட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

கடலில் இருந்து நீரைப் பம்ப் செய்வது மிகச் சுலபம். காரணம், ஆப்பிரிக்கா, தென்னமெரிக்க நாடுகளில், கடல் மட்டத்திலிருந்து கரை 10 அடியிலிருந்து 60 அடி வரை கூட உயரத்தில் உள்ளது. அதிருஷ்ட வசமாக தமிழ் நாட்டில், கரையின் உயரம் 2 அடியில் இருந்து 5 அடிக்குள் தான். எனவே பம்ப் செய்வது கடினமல்ல.

நகரக் குழாய் வழிகளுக்குப் பம்ப் செய்யும் முன், கடல் நீரை வடிகட்டித் தூய்மையாக்கி விட வேண்டும். தூய்மை ஆக்குவது என்றால் தூசு, தும்புகளை அகற்றுவது

★ இந்தியாவின் முதல் பெண் வெளியீட்டாளர்: அன்னை காக்கம்மையார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

மட்டுந்தான். அதில் கலந்துள்ள உப்பை அகற்ற வேண்டிய தில்லை. உப்பை அகற்றும் முறை பல கோடி ரூபாய்களை விழுங்கும். எனவே அது தேவையில்லை. சென்னை நகரில் உள்ள பல கிணறுகள், உப்புத் தண்ணீரையே வாரி வழங்கு கின்றன. பல இடத்தில் உப்பு நீர் கிடைத்தாலே போதும் என்ற நிலை! கக்கூஸ் கழுவக் கூடக் கார்மேகத்தைப் பார்த்துக் காத்திருக்கும் நிலை!

கடல் நீரை குழாய் வழி பாய்ச்சும் போது, குழாய் களை, உப்பரிப்பில் இருந்து காப்பாற்ற, கப்பலில் செய்வது போலத் தனி வகை பெயிண்ட் அடித்தால் போதும்.

குடி நீர்க் குழாய் வழி, கடல் நீரைப் பாய்ச்சலாமா? மூன்று நாள்களுக்கு ஒரு முறை பாய்ச்சுவது பற்றி எண்ண லாம் அல்லது கடல் நீருக்கெனத் தனிக் குழாய் வழியைப் பதிக்கலாம். கிருஷ்ணா, வீராணம் என்று கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி அழுவதைக் காட்டிலும், கடல் நீர்க் குழாயும், நீர்த் தொட்டியும் தனியே அமைப்ப-தற்கு சில கோடி ரூபாய்களே செலவாகும். அதனுடன் மற்றைய பெருந் திட்டங்களைப் போல ஆண்டுகள் பல ஆகாது.

பழைய குழாய் வழிகளுக்குப் பக்கத்தில் புதிய கடல் நீர்க் குழாய் பதிப்பதில், தயக்கம் இருக்குமானால், இனிப் புதிதாக வழங்கப்படும் நீர் இணைப்பில், கடல் நீர்க்கெனத் தனிக் குழாயும், குடி நீர்க்கு எனத் தனிக் குழாயும் அமைக்கலாம். கடல் உள்ள வரை கவலை இல்லை! —அரசு

"அங்கு ஏது சந்தாலர்கள்!"

"அப்படியென்றால் உங்கள் காட்டில் வேலைகளையெல்லாம் யார் தான் செய்வார்கள்."

குழு மனப்பான்மையுடன் செயல்படும் இவர்களுக்குள் ஏற்றத்தாழ்வே இல்லை. அபார கலைத் திறமை இவரிடம் பொதிந்திருக்கிறது. சீருடை போல கிட்டத்தட்ட ஆண்களும் பெண்களும் பச்சை ஆடைகளே அணிகிறார்கள். ஏழ்மை யாக இருந்தால், சுத்தமாக இருக்க முடியாது என்ற வாதத் தை முறியடிப்பது போல, இவர்களது சின்ன கிராமங்கள் கூட தூய்மையின் இருப்பிடமாக மிளிர்வதைக் கண்டேன்.

இவர்கள் தங்கள் இனத்தை "ஹோர்" என்று அழைக்-கிறார்கள். "மனிதன்" என்பது இதற்குப் பொருளாகும். —எழில்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# சந்தாலர்கள்

இந்தியாவின் ஆதிவாசி மக்கட் தொகையில் முதலிடம் வகிக்கும் (40 லட்சம்) சந்தாலர்களுடன் சில நாட்கள் பீகாரில் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

கள்ளமில்லா மனம், எளிமை, நேர்மை-இவை சுரண்டல் வாதிகளின் வலையிலே இவர்களை சிக்க வைத்த பல வீனங்கள். பீகாரின் சந்தால் பர்கானாஸ் மாவட்டம் இவர்களது தாயகம். அஸ்ஸாம், மே. வங்கம், ஒரிசா, திரிபுரா ஆகிய மாநிலங்களிலும் இவர்கள் பரவியிருக்கிறார்கள்.

இவர்களது வெள்ளை உள்ளத்தை பயன்படுத்தி, வரம்பு மீறி இவர்களை மார்வாடிகள் சுரண்டிய போது, மென்மையான இவர்கள் வன்முறையில் இறங்கும் காலம் வந்தது. 1855-56 களில் நடந்த இந்த சந்தால் புரட்சி, ஆதிகக எதிர்ப்பு வரலாற்றில் முக்கியமானதாகும், இப்புரட்சியே பீகாரில் 1857-இல் பிரபல சிப்பாய் கலகத்திற்கு வழி கோலியது.

இப்புரட்சிக்குப் பின், வெள்ளையர்கள், மார்வாடிகளிடமிருந்து இவர்களைக் காப்பாற்ற, சந்தாலர் யாரும், தனது நிலத்தை ஒரு சந்தாலன் அல்லது வேறொருவருக்கு விற்கக் கூடாது என்று சட்டம் பிறப்பித்தது. இச்சட்டம் இன்னும் நடைமுறையில் உள்ளது.

மிகக் குறைந்த கூலிக்காக கல் உடைக்கவும், அடகுக் காரர்களின் கைப்பிடியில் சிக்கித் தவிக்கவும் செய்யும் சந்தாலர்களின் பாமரத்தனத்தைக் கண்டு மனம் பதைத்தது. கொடிய வறுமையிலும் இவர்களில் பிச்சைக்காரர்களே இல்லை. இவர்களின் வறுமையோடு விளையாடும் வட்டிக் கடைகளுக்கு மார்வாடிகள் மட்டுமல்ல சில தமிழர்களும் அங்கு சொந்தக்காரர்களாக இருப்பதை உணர்ந்தேன்.

உழைக்கவே அவதாரமெடுத்திருப்பதாக நினைத்திருக்கும் இவர்களில் பலர், தங்களைச் சுற்றியுள்ள மாநிலங்கள் நாடுகள் பற்றி பூகோள சூனியத்திலிருக்கிறார்கள். ஐரோப்பிய பயணி ஒருவரிடம் ஒரு சந்தாலர் கேட்கிறார்.

"உங்கள் நாட்டிலும் சந்தாலர்கள் உண்டல்லவா?"

★ இந்தியாவின் முதல் செய்தித்தாள்: ஹிக்கியின் பெங்கால் கெஜட், கல்கத்தா: 21.1.1781

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# ஆங்கிலம் என்பதோர் நாகரிகம்

ஆங்கிலேயன் தமிழ் நாடு நீங்கலாகவே இந்தியாவிற்கு சுதந்திரம் தந்தானோ என்ற மயக்கம் ஏற்படுகிறது.

தமிழ், தமிழ் என்று கூக்குரலிடும் தமிழ் நாடு தவிர, பிற எல்லா இந்திய மாநிலங்களிலும் ஆங்கில மோகம் அழிந்து விட்டது. தாய் மொழியை அனைத்து மட்டங்களிலும் பயன்படுத்துவதே இயற்கையாக இருக்கிறது. நமக்குப் பின் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற எந்த நாட்டிலும் தமிழ்நாடு போல ஆங்கில அடிமை மோகம் இல்லை.

ஆண்ட அரசும், ஆளும் அரசும் தமிழை வாழ வைப்பதாகச் சொல்லி, இன்று ஆங்கிலத்திற்கு மோகப்பட்டு புத்துயிர் கொடுத்து வருவதே நடைமுறை.'தமிழில் மனு கொடுக்கலாம். தமிழிலே அதிகாரிகளிடம் பேசலாம்' என்றெல்லாம் அரசு அலுவலகங்களில் அறிவிப்புப் பலகை வைத்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் பலர் நாம் தமிழில் பேசினாலும், ஆங்கிலத்தில் தான் பதில் சொல்கிறார்கள். தமிழில் பேசுவோரை உயர் மட்ட அதிகாரிகள் ஈ, புழுவைப் போன்று பார்க்கிறார்கள். ஆங்கிலத்தில் பேசாவிட்டால், படிக்காதவன், நாகரிகம் இல்லாதவன் என்ற உணர்வே தமிழ்நாட்டு தலைநகரில் ஏற்படுத்தப்பட்டிருப்பது படு அநாகரிகமானது.

இங்குள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பேச்சு வரும் போதே 'டாடி','மம்மி' சொல்லிக் கொடுப்பதில் தாங்காமுடியா பெருமையடைகிறார்கள். தந்தை மகற்காற்றும் உதவி, ஆங்கிலப் பள்ளியில் இடம் தேடிப் பிடிப்பதாகி விட்டது.

இங்குள்ள அரசியல் வாதிகளோ, தங்கள் விளம்பர அரசியலுக்குத் தவிர வேறெதற்கும் தமிழ் உதவாது என்று முடிவு கட்டி, நெடுநாளாயிற்று.

"தாய் மொழியையும் அதிலுள்ள இலக்கியங்களையும் மதிக்காமல் வேற்று மொழிகளுக்குத் தங்களை அடிமையாகக் கொண்டவர்கள் தமிழ் நாட்டிலிருக்கும் அளவு வேற்று நாட்டிலில்லை" என்று கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் வருந்திக் கூறியது இன்றைக்கும் உண்மை.

—சீ. இரகுராமன், சிதகம்



FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

சிறு கதை

# அதிர்ச்சிகள்!

"சார், வண்டி பத்து நிமிஷம் நிக்கும் சார்... காபி சாப்பிடுறவங்க சாப்பிடலாம் சார்..." கண்டக்டரின் குரல் ஓய்ந்த வினாடியில் இருக்கைகளை விட்டு எழுந்த பயணி-களுடன், அடிவயிற்றை முறுக்கிப் பிழியும் பசியுடன் மாயாண்டியும் எழுந்தான்.

தேவாரம் போகும் அந்த பஸ்ஸில் மதுரையிலிருந்து வரும் அவன் தேனியிலிறங்கி, கடைசி டவுன் பஸ்ஸைப் பிடித்து தன் கிராமத்திற்கு போவதற்குள் இரவு பதினோரு மணியாகிவிடும். அதற்கு மேல் வீட்டில் ஏதேனும் சாப்பிட இருந்தால் தான் உண்டு.

பாக்கெட்டில் இரண்டு ரூபாய் இருப்பதை உறுதிப் படுத்திக் கொண்டு, பஸ் ஸ்டான்டிற்குள்ளிருக்கும் அந்த ஒரே ஓட்டலுக்குள் அவசரமாய் நுழைந்த அவன் மனதிற்குள் ஒரு கணக்கு இருந்தது. ஒரு ஸ்பெஷல் தோசை; ஒரு காபி; தன் கிராமத்தில் அறுபது பைசாவுக்கு போடப்படும் ஸ்பெஷல் தோசை, முப்பது பைசாவுக்குக் கொடுக்கப்படும் காபி; இங்கே மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒவ்வொன்றிற்கும், நாற்பது பைசாவும் இருபது பைசாவுமாகக் கூட்டிப் பார்த்தாலும் கூட ஒரு ரூபாய் ஐம்பது பைசாவிற்குள் டிபன் முடிந்துவிடும். அப்புறம் நிச்சயமாக மிஞ்சும் ஐம்பது பைசாவில் டவுன் பஸ்ஸைப் பிடித்து ஊர் போய்ச் சேர லாம் என்ற நம்பிக்கையுடன் மேஜையில் உட்கார்ந்தான்.

சர்வர் கொண்டு வந்து வைத்த தோசை அதிர்ச்சியைக் கொடுத்தது. ஸ்பெஷல் என்றுதான் ஆர்டர் கொடுத்தான். தன் கிராமத்தில் இன்னொரு மடங்கல்லவா இருக்கும் அறு-பது பைசா ஸ்பெஷல். வேண்டா வெறுப்புடன் தோசையைத் தொட்டு நக்கி விட்டு காபி வந்ததும் பருகினான். இரண்டாவது அதிர்ச்சி. மீண்டும் அவன் கிராமமே நினை-வுக்கு வந்தது. 'பத்து நிமிஷ' கேஸ்களைப் பயன்படுத்திக் கொள்ளும் ஓட்டல் நிர்வாகம் மனதில் உறைத்தது.

இத்தனை மலிவான பொருட்களை சப்ளை செய்ததற்கு, எதிர் பார்த்ததை விட குறைவாகவே பில்வரும் என எண்ண மிட்டவனாய் நிறையாத வயிறோடு எழுந்த போது பஸ்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

# எமக்கு வந்தவை

***சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள் :*** பேரா. அ. மார்க்ஸ்
வெளியீடு: சிலிக்குயில், அஞ்சற்பெட்டி: 55, குடந்தை-612001.
விலை: ரூ. 5.00

***அறிவியல் வளர்ச்சி :*** (அகரவரிசை வினா, விடை)
தொகுப்பாளர்: கரு அழகப்பன், வெளியீடு: சிவகாமி பதிப்பகம்,
392, தி. நெ. சாலை, திருவொற்றியூர், சென்னை-600019.
விலை: ரூ. 7.50

***பெரியார் சாதித்ததுதான் என்ன?***
தொகுப்பு: வேலூர் செந்தமிழ்க்கோ, வெளியீடு: அறிவுக் கனல்
பதிப்பகம், புரட்சிக் கவிஞர் இல்லம், அஞ்சற் பெட்டி எண்: 109
வேலூர்-632001. விலை: ரூ. 10.00

***வடிவுக்கரசி :*** (நாவல்)
ஆசிரியர்: இன்பவாணன், வெளியீடு: பாரதி தமிழ்ச்சங்கம்,
கிடைக்குமிடம்: நண்பன் பதிப்பகம். 20.B, வடக்கு ராஜா சந்து
தூத்துக்குடி-1. விலை: ரூ. 6.00

***இயேசு காவியம் - ஒரு பார்வை :***
ஆசிரியர்: கவிஞர் அமலன், வெளியீடு: விமலை நூலகம்,
பெரம்பலூர்-621212, தமிழ் நாடு, விலை: ரூ 1.00

***காந்தியார் சாந்தி அடைய...?***
ஆசிரியர்: A. V. P. ஆசைத்தம்பி: வெளியீடு: அறிவுக் கனல்
பதிப்பகம், புரட்சிக் கவிஞர் இல்லம், 12, கலாஸ் அத்திமரம் தெரு,
கலாஸ்பாளையம், வேலூர்-632001. விலை: ரூ. 1.00

***புத்த நெறி :***
ஆசிரியர்: தந்தை பெரியார், வெளியீடு: அறிவுக் கனல் பதிப்பகம்,
புரட்சிக் கவிஞர் இல்லம், 12, கலாஸ் அத்திமரம் தெரு,
கலாஸ்பாளையம், வேலூர்-632001. விலை: ரூ 1.00

***இரவில் உதித்த சூரியன் :*** (புதுமைக் கவிதைகள்)
ஆசிரியர்: சாந்தி அருளானந்தா, வெளியீடு விமலை நூலகம்,
பெரம்பலூர்-621212, தமிழ் நாடு விலை: ரூ. 2.00

***வள்ளுவர் வழி :*** (திங்கள் இதழ்)
ஆசிரியர்: கல்லை தே. கண்ணப்பன். முகவரி: 3, தேசி காலனி,
பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை-600012. தனியிதழ்: ரூ 1.00,
ஆண்டு சந்தா: ரூ 10.00, ஆயுள் சந்தா: ரூ. 100.00

***பாவல் :*** (தமிழ் ஈழத்திற்காக யூத்ஸ் வியூஸ் வெளியீடு)
ஆசிரியர்: பாவல் சங்கர், 55, T. A. தெரு, சென்னை-600004.
விலை: ரூ. 1.50

---

*'ஹாரன்' ஒலித்தது. சர்வர் பில்லை நீட்டினான். 1.90 என்றிருந்தது.*

— அல்லி உதயன்

★ உலக உணவு நாள் அக்டோபர் 16

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

*தன் திரைப்படங்களில் தன்னை முன்னிறுத்தி தனிநபர் துதிதேடும் பாணியில் படங்களை அமைத்துக்கொண்டதுடன், தன் படங்களுக்குக் கூட்டம் குறையாமல் இருக்கவும் சில தந்திரங்களைச் செய்தார் எம்.ஜி.ஆர்.*

*இதற்காக சினிமாவில் செக்ஸ் காட்சிகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க முற்பட்டார். 1960 வதுகளின் இறுதியிலும், 70துகளிலும், இவரது படங்கள் பிற ஆபாச திரைப்படங்களுக்கு செக்ஸ் முன்னோடியாகவே இருந்தன. முண்டு உடுத்திக்கொண்டு, அல்லது உடலோடு ஒட்டிய ஆடை அணிந்து கொண்டு, மேலாடை இல்லாது ஜாக்கெட் அணியும் கதாநாயகிகள் கட்டிப்புரள்வது, சேற்றில் இறங்கி உருள்வது, உடல் முழுவதும் தடவுவது, மோகக் கிளர்ச்சியைத் தூண்டும் வண்ணம் பாடுவது இவையே இவரது படங்களின் வழக்கமான அயிட்டங்கள். படங்கள் பெரும் மக்கள் திரளைச் சேர்த்ததற்கும் இதுவே ஒரு முக்கிய காரணம்.*

## திரையுலகப்பிரமுகர்கள்: எம்.ஜி.ஆர் /4

அவருடைய கதாநாயகிகள வெறும கவர்ச்சிப் பாவையர் களாகவே சித்தரிககப்பட்டார்கள் குணசித்திர நடிகை என்று பெயர் வாங்கிய சாவித்திரியைக் கூட வேட்டைக்காரனில் நடிக்க வைத்து உருட்டி, புரட்டி எடுத்து தேர்ந்த நடிகை என்ற 'இமேஜ்' பாழ்படச் செய்து விட்டார்.

தனது இளமை, மாறாமல் காட்டப்பட வேண்டுமென்பதற்காக ஒரு குறிப்பிட்ட காலம் வரை தான் நடித்து வந்த பானுமதி, அஞ்சலி தேவி, டி.ஆர். ராஜகுமாரி. G. வரலட்சுமி, பத்மினி, ஆகிய நடிகைகளை ஒதுக்கிவிட்டு மிக இளமையான நடிகைகளையே ஒப்பந்தம் செயயத் தொடங்கினார்

தன்னோடு நடிக்கும் நடிகைகள் பிறர் படங்களில் நடிக்கக் கூடாது, ஒப்பந்த காலத்தில் நடிகை கல்யாணம் செய்துக்கொள்ளக் கூடாது, பிள்ளை பெற்றுக்கொள்ளக் கூடாது என்று நிபந்தனைகள் விதித்து தன் "இமேஜை" காப்பாற்ற புதிய கொத்தடிமை கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

இவரது நடிகைகள் நடிப்பையே மறந்து கொலு பொம்மைகளாக, கவர்ச்சி நாயகிகளாகவே உலா வர முடிந்தது. இவரது ஒப்பந்தம் முடிந்த அன்று நடிகை சரோஜா தேவி மனந்திறந்து சொன்னார்:—

"எம்.ஜி.ஆரோடு நடித்து எனக்கு நடிப்பே மறந்து விட்டது. இனி மேல் முயற்சி செய்து நானும் ஒரு நல்ல நடிகை என்பதை நிரூபிப்பேன்"

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

எம்.ஜீ.ஆர். படங்களை விட்டு வந்தபின் தான் பணமா பாசமா, குலவிளக்கு, தாமரைநெஞ்சம் போன்ற படங்களில் தன் திறமையை முழுமையாக சரோஜாதேவியால் காட்ட முடிந்திருக்கிகிது.



தன் பாத்திரப்படைப்பைப் படத்தின் உயிர் நாடியாகத் திணிக்க வேண்டுமென்பதற்காக, தன்னை விட சிறப்பாக நடித்தவர்களின் காட்சிகளை வெட்டியெறிய தயங்கியதில்லை எம். ஜீ. ஆர். நாடோடி மன்னனில் பானுமதி பாத்திரத்தின் பெரும் பகுதியை கத்தரித்த் இவரது இந்த கீழ்த்தர வேலை, தொடர்ந்து டி. எஸ். பாலையா, தங்கவேலு, சந்திரபாபு, குலதெய்வம் ராஜகோபால், சரோஜாதேவி, ஏன் ஜெயலலிதா உட்படத் தொடர்ந்ததற்கு வாக்குமூலங்கள் உண்டு:

"தன்னோடு நடித்த அத்தனை நடிகர்கள் திறமையாக நடித்து விட்டார்கள் என்பதற்காக அந்தக் காட்சி படத்தில் இருந்தால் தன்னை விட அந்த நடிகர் திறமையாக நடித்துவிட்டார் என்றுமக்கள் கூறிவிடுவார்களோ என்று எண்ணி வஞ்சகமாக அச்காட்சிகளை வெட்டி எறியச் சொல்லியிருக்கிறார் இந்தஎம். ஜி. ஆர்."—நாத்திகம் பத்திரிகையில் (1967) டி. எஸ். பாலையா.

எம்.ஜீ.ஆர். தனது அரசியல் லாபம் கருதி, திரையுலக பழம் நடிகர்களை இப்படி சிறுமைப்படுத்தியும், இருட்டடிப்பு செய்தும் ஏன் சிலரை படஉலகை விட்டே ஒழிக்கவும் முனைந்த கொடுமை உச்ச கட்டத்திற்கு வந்த காலத்தில், 1968இல் திருச்சியில் தமிழ்க் கலைஞர்களின் சார்பில் ஒரு சிறப்புக் கூட்டம் நடந்தது. அதில் கண்ணதாசன், ஜெயகாந்தன், நாத்திகம் ராமசாமி, டி. எஸ். பாலையா தங்கவேலு, சாரங்கபாணி, குலதெய்வம் ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டு, எம்.ஜீ.ஆரின் திரையுலக அராஜகத்தை கண்களில் கண்ணீரோடு விவரித்தனர். அதில் நடிகர் தங்கவேலு பேசியது பலரின் நெஞ்சத்தைத் தொட்டது:—

"என்னை சினிமா உலகிலிருந்தே ஒழித்துவிட எம். ஜி. ராமச்சந்திரன் சதி செய்கிறார். அவரால் என்னை ஒழித்துவிடமுடியாது அப்படியே அவரால் நான் சினிமா உலகிலிருந்து விரட்டப்பட்டாலும்

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

நான் அதற்காக அஞ்சிவிட மாட்டேன். நானும் என் மனைவி சரோஜாவும் ரயில் வண்டிகளில் பாட்டுப்பாடியாவது இந்த தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டுதான் இருப்போம்.''

வெளியலகத்திற்கு பெரிய மகானாக, வள்ளலாக, சீர்திருத்த செம்மலாக இருக்கின்ற எம்.ஜி.ஆரின் உண்மை சொரூபம் வேறுமாதிரியானது என்பது அவரோடு நெருங்கியவர்களுக்குத் தெரியும்.

விதவையை மறுமணம் செய்யும் புரட்சிகரமான பாத்திரத்தை 'பூல் அவுர் பத்தர்' என்ற இந்திப் படத்தில் தர்மேந்திரா ஏற்றார். இதே படத்தை தமிழில் 'ஒளி விளக்கு' என்ற பெயரில் எடுக்க எஸ். எஸ். வாசன் முன்வந்தார். தி மு.க. என்கிற சமூக சீர்திருத்த இயக்கத்தில்-புரட்சி நடிகர் என்ற பெயர் சூட்டிக்கொண்டு இருக்கிறாரே-ஆகவே இந்த புரட்சிகரமான பாத்திரத்திற்கு புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் தான் சரியானவர் என நினைத்து வாசன் இவரை ஒப்பந்தம் செய்தார்.

''நான் விதவையை மணப்பதாகக் காட்டினால் என் 'இமேஜ்' கெட்டுப்போய்விடும்.'' என் ரசிகர்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று படப்பிடிப்பு முடியும் தறுவாயில் எம்.ஜி.ஆர். மக்கார் செய்து, வலுக்கட்டாயமாகக் கதையையே வேறு மாதிரியாக மாற்றும்படி வாசனை வற்புறுத்தினார்.

இந்திப்படத்தின் சிறப்பு அம்சமே விதவை மறுமணம் தான்! ஆனால் புரட்சி நடிகரோ ஏற்கனவே இன்னொருவருக்கு மனைவியாக வாழ்ந்தவளை நான் கல்யாணம் செய்வதாகக் காட்டினால் ரசிகர்கள் ஏற்க மாட்டார்கள் என்றார். ஆனால்-

நிஜ வாழ்க்கையில் ஏற்கனவே கணபதி பட் என்பவரின் மனைவியான வி.என். ஜானகியோடு 1950முதல், வாழ்க்கை நடத்திவருகிறார். இது மறுமணம் அல்ல ஜானகியின் கணவன் உயிரோடு இருக்கும்போதே எம்.ஜி.ஆரின் மனைவி உயிரோடு இருக்கும்போதே வாழ்ந்த வாழ்க்கை! 18 ஆண்டுகளுக்குப் பிறகு தான் வி. என். ஜானகியை எம்.ஜி.ஆர். சட்டப்பூர்வமான மனைவியாக்கினார். இதையெல்லாம் தன் ரசிகர்களுக்குத் தெரிந்து விடாமல் எம்.ஜி.ஆர். தன் இமேஜை காப்பாற்றிக்கொண்டாரா? (தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

★ உலகச் சுற்றுப்புறச் சூழல் துப்புரவு நாள் ஜூன் 5

# ஜெராக்ஸ் XEROX

☐ எழுதியதை அப்படியே மறுபதிவு செய்யும் தனது யோசனையை முதன்முதலாக அமெரிக்க விஞ்ஞானி செஸ்டர் காரிலிசன் தான் 1938 இல் பதிவு செய்தார். "சிராகிரபி" துறையின் முன்னோடி இவர்தான்.

☐ முதல் சிராக்ஸ் பதிவு எந்திரம் 1947 இல் உருவானது. 1950 இல் அமெரிக்க மார்க்கெட்டில் நடைமுறைக்கு வந்தது. நமக்கு வர இன்னும் 20 ஆண்டுகளுக்கு மேலாயிற்று.

☐ சிராகஸ் என்ற பெயர் 'உலர் எழுத்து' என்ற பொருள் உள்ள கிரேக்க சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

☐ ஒரு பிரதி எடுக்க சராசரியாக ரூ. 1/- வரை கட்டணம் நம் நாட்டில் வசூலிக்கப்படுகிறது சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இதுவே 10 காசு தான் ஆகிறது.

☐ நிறைய போட்டி உள்ள இடங்களில் 50 காசுக்கு பிரதி எடுக்கிறார்கள். நிறைய பேர்கள் இதனைப் பயன்படுத்த முன் வரும்போது இன்னும் விலை குறையும்.

## எப்படி வேலை செய்கிறது?

பதிவாக வேண்டிய காகிதம் ஒரு கண்ணாடி திரைக்குமேல் வைக்கப்படுகிறது. மின் தூண்டுதல் உள்ள ஒரு தட்டில், இந்த பதிவாக வேண்டிய காகிதத்தின் நிழல் படும்படி ஒளி பாய்ச்சுகிறார்கள்.

எழுத்து உள்ள இடம் தவிர மற்றபடி வெறுமையாக உள்ள இடங்களில் உள்ள பாசிடிவ் மின்தூண்டுதல் அழிக்கப்படுகிறது. எழுத்து உள்ள இடத்தில் ஒளி படாததால் அது அப்படியே தங்குகிறது.

இப்போது தட்டில் நெகட்டிவ் மின் தூண்டுதல் உள்ள ஒரு பொடி சீராகத் தூவப்படுகிறது. அது பாசிடிவ் மின் தூண்டுதல் உள்ள இடத்தில் மட்டும் ஒட்டிக்கொள்கிறது.

பாசிடிவ் மின் தூண்டுதல் உள்ள எழுத்துக்கள் உள்ள இடத்தில் இப்போது இந்தப் பொடி ஒட்டிக்கொண்டு, ஒரு வெள்ளைத்தாளில் சிறு சூட்டுடன் அழுத்தும்போது பதிவாகி விடுகிறது.

—அஞ்ஞானி

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

- ☐ சுட்டி ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வெளி வரும்
- ☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரு. 5-00.
- ☐ தனிப்பிரதி 50 காசு.
- ☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040.



**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?**

இதழ் எண்கள் 1 முதல் 7, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.



**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்**

'சுட்டி'யை இன்னும் படிக்காத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்கு சுட்டியை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் உங்கள் சார்பாக அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.



# ரங்கா டைப் பௌண்ட்ரி

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- ☐ எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- ☐ அச்சக உபகரணங்கள்.
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம்: 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம்: 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
தொலை பேசி: 37999, 664293 ☎



**வீட்டுடன் மனை விற்கப்படும்:— ராஜேந்திரன், 32-C, மாந்தோப்பு, எலிம் நகர், பெருங்குடி, சென்னை-600096.**


FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

**கூட்டு விற்பனையாளர்கள் :** அதிகாரப் பூர்வமாக கீழ்க்கண்ட இடங்களில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இடங்கள் தவிர பிற இடங்களிலிருந்து விற்பனை செய்ய ஆர்வம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்:-

சென்னை மாவட்டம் : நகரம் முழுவதும்

செங்கல்பட்டு மாவட்டம் : தாம்பரம், வண்டலூர், பாடி, அம்பத்தூர், திருவள்ளூர், எண்ணூர்.

வட ஆற்காடு மாவட்டம் : திருப்பத்தூர், ஆரணி, போளூர், குடியேற்றம், செட்டியூர், அரக்கோணம், தென்முடியனூர்.

தென் ஆற்காடு மாவட்டம் : கள்ளக்குறிச்சி, வளவனூர், திருக்கோவிலூர், சிதம்பரம், நெய்வேலி, கடலூர், பண்ருட்டி, விருதாச்சலம்.

தஞ்சாவூர் மாவட்டம் : தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், வேதாரண்யம், மன்னார்குடி, ஒரத்த நாடு, பாபநாசம்.

திருச்சி மாவட்டம் : திருச்சி அரும்பாவூர், கரூர்.

சேலம் மாவட்டம் : சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, ஜலகண்டாபுரம், அயோத்தியாப்பட்டணம் காளப்பநாயக்கன் பட்டி, சங்ககிரி

பெரியார் மாவட்டம் : ஈரோடு, B-குமாரப்பாளையம், எண்ணமங்களம், கொமராயனூர், தாராபுரம், கோபிசெட்டிப்பாளையம், புளியம்பட்டி.

தர்மபுரி மாவட்டம் : தர்மபுரி ஊற்றங்கரை, ஒசூர்

நீலகிரி மாவட்டம் : உதகமண்டலம், கோத்தகிரி, நீஹாரங்

கோயம்புத்தூர் மாவட்டம் : கோயம்புத்தூர், பூளைமேடு, சிங்காநல்லூர், காந்திபுரம், வடகோவை, வரதராஜபும், அவனாசி, சூலூர், நெகமம், திருப்பூர், சின்னியம்பாளையம், நம்பியாம்பாளையம், பல்லடம், ஏரிப்பட்டி, உடுமலைப்பேட்டை கணியூர்

மதுரை மாவட்டம் : மதுரை, திண்டுக்கல், தேனி, சின்னமனூர், தென்கரை


இராமநாதபுரம் மாவட்டம் : காரைக்குடி, இராமேஸ்வரம், மானாமதுரை, உளகம்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம்

திருநெல்வேலி மாவட்டம் : தூத்துக்குடி, எப்போதும் வென்றான், இராதாபுரம், குருக்குச்சாலை, புதியம்புத்தூர், தென்காசி, செங்கோட்டை

கன்னியாகுமரி மாவட்டம் : நாகர்கோவில், மார்த்தாண்டம், குழித்துறை, பூதப்பாண்டி

வெளிமாநிலங்கள் : பம்பாய், பெங்களூர்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

*நூல் அறிமுகம் :*

## எளிய முறையில் பிணியகற்றும் மூலிகைகள் பற்றி...

முழுக்க முழுக்க நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வேம்பு, வில்வம், மா, அத்தி, அரசு போன்ற இலைகளின் துணைகொண்டு தீராத பல நோய்களுக்கு நாமே செலவின்றி மருத்துவம் செய்து கொள்ள வழி சொல்கிறார் டாக்டர் சி. கே. மாணிக்க வாசகம்.

இதில் இவர் குறிப்பிடும் மருந்து பொருட்கள் உடலுக்கு நன்மை மட்டுமே பயக்கக்கூடிய எளிய மூலிகைகள் என்பதால், யாரும் அச்சமின்றி இவர் முறைகளைப் பயன் படுத்திப்பார்க்கலாம். மனிதர்கள் உணவில் கலந்துண்ண மறந்தஅது—மருந்து அதுவாகிறது என்பது 'மருந்து' என்பதற்கு இவர் தரும் விளக்கம்.

*இந்நூலில் இடம் பெறும் சில பயனுள்ள கட்டுரைகள்:-*


நொறுங்கத் தின்று நூறாண்டுகள் வாழ்வது எப்படி?
யானைக்கால் வியாதி குணமாக...
மூளைக் காய்ச்சல்
தீராத வயிற்றுவலி நீங்க
அங்கக் குறைபாடுள்ள குழந்தைகளின் பிறப்பைத் தவிர்ப்பது எப்படி?
வலியின்றி குழந்தையைப் பெறுவது எப்படி?
தலை முடி உதிராதிருக்க, தலைப் பொடுகு குணமாக
சரும வியாதிகளின் தொல்லைகள் நீங்க
புற்று நோய் குணமாக
நன்கு தூங்க

மருத்துவக் கட்டுரைகளுடன், சமத்துவ சமுதாயம் அமைத்திடவும், மனித குலம் தழைக்கவும் வேண்டி இவர் இணைத்துள்ள கட்டுரைகள் இம்மருத்துவரின் சமுதாயப் பார்வையைக் காட்டுகின்றன. —ஜோ

விலை: ரூ. 10/- வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
10, சோமசுந்தரம் தெரு, சென்னை-600 017.

FREE E-BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011

மாத இதழ் 1, நவ. 1983 Regd. No. TN/MS(N)/317
nsed to post without prepayment Licence No. TN/MS(N)WBP-58



http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL) தமிழகம்

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthiough in sugarcane oduction with innovative technology and the farmers have achieved uccessive Increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes earn an additional Income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribu g over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousan mers (a bulk of Whom are small and marginal farmers) and generatin nful rural employment to over fifty thousand families in the primary, condary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro ammes (I) Sakthi High School Provides a conducive environment for dy and development of rural children. (II) Sakthi Institute of Techn gy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam ospital provides medical care for the region.

ad Office:
-A, Race Course Road
imbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E-BOOKS - www.thamizham.net - TM2469 / April 2011